கூவம் மணக்கிறது

4632

தமிழ்நாடு அரசு செய்தித்துறை வெளியீடு



சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு கூவம் சீரமைப்புத் திட்டத்தை தலைமைப் பொறியாளர் விளக்குகிறார். உடனிருப்பவர் பொதுப்பணித் துறை அமைச்சர் திரு எஸ். ஜே. சாதிக்பாட்சா.

சட்ட மேலவை உறுப்பினர்களுக்கும பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் திரு என். வி. நடராசன் அவர்களுக்கும் திட்டம் விளக்கப்படுகிறது.



இந்தியத் துணைக் கண்டத்திலேயே எழில் மிகுந்த நகரம் சென்னை!

அமைதி தவழும் இந்தப் பட்டினத்தில், கண்டவர் மயங்கும் மெரினு கடற்கரை! வரலாறு பேசும் செயின்ட் ஜார்ஜ் கோட்டை! வள்ளுவர் வாழ்ந்த திருமயிலை! புனிதர் தாமஸ் இருந்து உபதேசித்த 'சாந்தோம்'!

கலங்கரை விளக்கம்—உயர்நீதி மன்றம்—தேசியக் கலைக் கூடம்—கண்காட்சி நிலையம்—காந்தி மண்டபம்—அண்ணு சதுக்கம்.

அண்ணு சதுக்கம்



அட்டைப் படம் :

அறிஞர் அண்ணு அவர்கள் 19—9—1967 அன்று கூவம் சீரமைப்புத் திட்டத்தை துவக்கி வைக்கும் காட்சி.



கூவம் முகத்துவாரம்

திருமயிலை கபாலீச்சுரம்—திருவல்லிக்கேணி பார்த்தசாரதிப் பெருமாள் கோவில்—திருவொற்றியூர் தியாகேசுவரர்.

அப்பப்பா !

வரலாற்றுச் செறிவும் வளமைச் சிறப்பும் இந்தச் சென்னை மாநகருக்குத்தான் எத்தனை ! எத்தனை !!

நாள்தோறும் நகருக்கு நூற்றுக் கணக்கான வெளிநாட்டவர் வருகிறார்கள்! வெளி மாவட்டங்களில் இருந்து நாள்தோறும் வந்து செல்வோர் எண்ணிக்கை பல்லாயிரக் கணக்கில் இருக்கும்! ஏதாவது விழாக் காலமாக இருந்தால் லட்சோப லட்சம் மக்கள் கூடுகிறார்கள்!

சென்னையின் எழிலையும் சிறப்பையும் கண்டு களிக்கும் இத்தனை மக்களும் நகரின் ஆங்காங்கே செல்லும்போது, குறிப்பிட்ட சில இடங்களைக் கடந்து செல்லுகையில் முகத்தைச் சுளிக்கிறார்கள். மூக்கைப் பிடித்துக் கொள்கிறார்கள்!

இது ஏன்? நகரின் இதயத்திலே 'கூவம்' ஓடுகிறது!

அழகு மிகுந்த சென்னை, என்று கண்டவரும் கேட்டவரும் புகழும் சென்னை மாநகரத்தில் சாக்கடையாலும், நகரக் கழிவுகளாலும் கெட்ட நாற்றத்தைப் பரப்பி நகரின் புகழைக் குறைத்து வந்தது கூவம் ஆறு.

தவறு செய்தவனை "கூவத்தில் குளிப்பாட்டி எடுத்து வா" என்று சென்னை நகரமக்கள் வேடிக்கையாக சொல்வது உண்டு!

இது, அன்று தூய நீரோடை ஆக விளங்கிய கூவத்தின் குற்றம் அல்ல; இடையில் நிகழ்ந்த கலப்படத்தின் குற்றம்.

திருவள்ளூர் வட்டத்தில் 'கூவம்' என்ற பெயரில் ஒரு ஊர் உண்டு. அந்த ஊர்ப் பெயரை தாங்கியுள்ள இந்த ஆறு கி.பி. 760-ம் ஆண்டிலேயே நீர் வழிப் போக்குவரத்துக்காகச் செப்பனிடப் பட்டது.

பரபரப்பான ஆக்கவேலைகள்....!



கழிவு நீர் நிறைந்த கூவம்!

கல்வி வள்ளல் பச்சையப்பர் நாள்தோறும் இந்த ஆற்றிலே குளித்து விட்டுத்தான் சென்னமல்லீஸ்வரர் கோவிலுக்குப் போவாராம்! இதை வெள்ளைக்காரர்கள் 'எழும்பூர் ஆறு' என்று அழைத்து வந்தார்கள்.

இத்தகைய வரலாறு கொண்ட இக்கூவம் ஆற்றில் நுங்கம்பாக்கம் ரயில் பாலத்தில் இருந்து கடற்கரை வரை சென்ற சில மாதங்களாக பரபரப்பான ஆக்க வேலைகள் நடந்து வருவதை சென்னை நகர மக்கள் பார்த்திருப்பார்கள்.

ஆம்!

கூவம் மறுபிறவி எடுக்கிறது!

முகத்தைச் சுளித்து மூக்கைப் பிடித்த நகர மக்களின் முகம் மலர அகம் மலர கூவம் மணக்கப் போகிறது!

1967-ம் ஆண்டு ஜூலையில் கூவம் சீரமைப்புத் திட்டத்திற்காகத் தமிழ்நாடு அரசு ஒரு கோடியே 10 லட்சத்து 50ஆயிரம் ரூபாய் அனுமதி அளித்தது. இதில் 94 லட்சம் ரூபாய் ஆறு சீரமைப்பு வேலைகளுக்கும், ரூ. 16·50 லட்சம் தற்சமயம் ஆற்றோரப்

பகுதிகளில் வசிக்கும் குடிசை வாழ் மக்கள் மறு வாழ்வுக்கும் ஆகும். ஆற்றுச் சீரமைப்பு வேலைகள் முதல் நிலைக்கு ரூ. 32 லட்சமும் இரண்டாம் நிலைக்கு ரூ. 62 லட்சமும் செலவாகும்.

1967-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19-ம் தேதி யன்று கூவம் சீரமைப்புத் திட்ட முதல் நிலை வேலைகளை அறிஞர் அண்ணா அவர்கள் துவக்கி வைத்தார்கள். அவர்கள் பேசுகையில் :

“லண்டன் நகருக்குப் பெருமை தருவது தேம்ஸ் ஆறு என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அது போல் இத்திட்டம் நிறைவேறினால் சென்னை நகருக்கே பெருமை ஏற்படும்” என்று குறிப் பிட்டார்கள்.

அன்றைய பொதுப்பணி அமைச்சரின் ஆர்வத்தைப் பாராட்டி அவர்கள் பேசுகையில்:

“முதல் பட்ஜெட் தயா ரிக்கும்போதே இந்தத் திட்டத் துக்குப் பணம் ஒதுக்கும்படி என்னுடைய தம்பி கருணாநிதி என்னைத் துளைத்துக் கொட்டி விட்டார் — ஒதுக்கியிருக்கிறேன் என்று சொல்லியும் திருப்தி அடையாமல் அது பட்ஜெட் டில் இருக்கிறதா என்று பார்த்த பின்னரே திருப்தி அடைந்தார்” என்று கூறினார்கள்.

கூவம் ஆறு ''சத்தரை'' என்ற ஊரில் இருந்து சென்னைக் கடற்கரை வரை 41 மைல் நீளமுள்ளது. இந்த ஆற்றின் நீர்ப் பிடிப் பரப்பு 112 சதுர மைல்கள். அந்தப் பரப்பில் ஆண்டுக்கு சுமார் 41 அங்குல மழை பெய்கிறது.

வடகிழக்குப் பருவ மழையின் போது கூவம் பெருக்கெடுக்கிறது. ஆனால் மழை ஓய்ந்ததும், நீரும் குறைந்து, முகத்துவாரத்தில் மண் மேடிட்டு விடுகிறது. வெள்ளப் பெருக்கு நீரை வடிப்பதற்காக, ஆண்டுதோறும் முகத்துவார மணல் மேடு வெட்டப்பட்டு வழி செய்யப் படுகிறது. இரண்டொரு மாதங் களில் மீண்டும் மணல் திட்டு ஏற்பட்டு விடுகின்றது. மணல் மேடு ஏற்படாமல் நிலையாக நீர் செல்லு

உழைப்பின் செறிவு !

மளவுக்கு, ஆற்றில் நீர்ப் பெருக்கு இல்லை. எனவே முகத்துவாரத்தில் ஆண்டு முழுதும் நீர் வடிவதற்கு வசதியாக அகழ்ந்தெடுப்பது அவசிய மாகின்றது. கூவம் முகத்துவாரத்தில் அலைகளால் வாரி ஒதுக்கப்படும் மணல் நாள் ஒன்றுக்கு 2,000 டன் இருக்கும்.

நகராட்சி பம்பிங் ஸ்டேஷன்கள் சிலவற்றில் கழிவுநீர், மழை நீர் வடி காலுடன் சேர்க்கப்பட்டு அவை கூவத் திலும், பக்கிங்ஹாம் கால்வாயிலும் வந்து சேருகின்றன. கூவத்தில் சேரும் சாக்கடைகளின் மொத்த எண்ணிக்கை 51. கூவமும் பக்கிங்ஹாம் கால்வாயும் ஒன்றுடன் ஒன்று இணைப்புள்ளவை. இவற்றின் துர்நாற்றத்துக்குக் கழிவு நீரே காரணமாகும். குறிப்பாகக் கோடை காலத்தில் நீர் குறையும் போது துர்நாற்றம் அதிகமாகின்றது,

சென்னை மாநகராட்சி தற்போது வடிகால் புதைச் சாக்கடைத் திட்டம் ஒன்றைத் தீட்டியுள்ளது. இதன் மூலம் கழிவு நீர் கூவத்திலும் பக்கிங் ஹாம் கால்வாயிலும் கலக்காமல் தடுக்கப்படும். இத்துடன் கூவத்தில்



கடற்பாலம்
அமைக்கும்
பணி

நல்ல நீர் இருக்கும்படி செய்தால் அது நகருக்கே தனி அழகு தரும். ஆனால் நல்ல நீருக்கு எங்கே போவது?

இந்தச் சமயத்திலே ஓர் அருமையான யோசனை தெரிவிக்கப்பட்டது. அதாவது, எண்ணூர் அனல் மின் நிலையத்திலிருந்து குளிர்ச்சிக்காகப் பயன் படுத்தப்பட்ட நீரை விநாடிக்கு 150 கன அடி அளவுக்கு பக்கிங்ஹாம் கால்வாயில் விட்டு அந்தத் தண்ணீரை கூவம் ஆற்றில் 5 மைல் 6 பர்லாங் நீளம் வரை தேக்குவது என்பதே அந்த யோசனை. இதன் படி, கூவத்திலும் புக்கிங்ஹாம் கால்வாயிலும் சுத்த நீர் ஓட வழி வகுக்கப்பட்டுள்ளது. சாக்கடைகள் அடைக்கப்படுகின்றன.

நாற்றம் ஒழிந்தபின் கூவம் மணப்பதற்குக் கேட்பானேன்!

எண்ணூரில் இருந்து வரும் நல்ல நீர் பக்கிங் ஹாம் கால்வாயில் வருவதால், அக்கால்வாயிலும் நாற்றம் இருக்காது. அதே போல் இந்த நீர் சேப்பாக்கம், திருவல்லிக்கேணி, மைலாப்பூர் ஆகிய பகுதிகளில் ஓடும் கால்வாயிலும் ஓரளவு தேக்கப் படுவதால் அந்தப்பகுதிகளிலும் நாற்றம் ஒழியும்.



கூவம் சீரமைப்புத் திட்டம் இரண்டு நிலைகளாக பிரித்துப் பூர்த்தி செய்யப்படும்.

முதல் நிலை வேலையில், முகத்துவாரத்தில், கால்வாய்க்கு மதகு(Regulator) அமைக்கப்பட்டுக் கடற் பாலத்துடன் (Jetty) மணல்வாரி யந்திரங்கள் நிறுவப்படும்.



மதகு அமைக்கும் வேலை

இரண்டாம் கட்ட வேலையில் நீரோட்டத்தைக் கால்வாய்ப்படுத்துதல், பூங்கா, புல்வெளிகள், பாதைகள் அமைத்தல் முதலிய வேலைகள் மேற்கொள்ளப்படும்.

முதல் நிலை வேலைகள் இந்த ஆண்டு ஜூன் மாதம் முடிவடையும். இரண்டாம் நிலை வேலை டிசம்பரில் முடிவடையும்.

கூவம் திட்டத்தால் வேலை வாய்ப்புப் பெறும் ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள்.



ஓயாது நீர் இறைக்கும் குழாய்கள்

சென்னை நகரின் அழகுக்கு அழகு செய்யும் இத் திட்டத்தின்கீழ் கூவம் முகத்துவாரத்தில் இருந்து நுங்கம்பாக்கம் ரயில் பாலம் வரை என்ன வேலை நடக்கிறது என்பதை நாமும் சென்று பார்ப்போம்.

முகத்துவாரத்தில் சேரும் மண்ணை அப்புறப் படுத்துவதற்கான மணல்வாரி யந்திரங்கள் நிறுவு வதற்காகக் கடற்பாலமும் தண்ணீரைக் கட்டுப் படுத்தும் மதகும் அமைக்கும் வேலை மிக வேகமாக நடைபெற்று வருகிறது.

கடற்பாலம் அமைப்பதற்காக மொத்தம் 34 காங்க்ரீட் தூண்கள் நிறுவப்படுகின்றன. இவை ஒவ்வொன்றின் மொத்த உயரம் 67 அடி. இவை பூமிக்குள் 60 அடி ஆழத்திற்குப் புதைக்கப்படும். வெளியில் 7 அடி உயரமே தெரியும். இதன் மீது தான் மணல் வாரி யந்திரம் நிறுவப்படும். இந்தக் கடற்பாலத்தின் நீளம் மொத்தம் 134½ அடி. கட லுக்குள் உள்ளே 107 அடி வரை செல்லும் இந்தப் பாலத்தின்மீது அமைக்கப்படும் 10 மணல் வாரி யந்திரங்கள் முகத்துவாரத்தில் சேரும் மணலை அப்புறப்படுத்தும்.

அடுத்து மதகு அமைப்பதற்காகக் கிணறுகள் தோண்டப்படுகின்றன. இந்த மதகு, ஆற்றில் உள்ள நீரைக்' கடலுக்குள் விடவோ அல்லது கடல் நீரை ஆற்றுக்குள் விடவோ பயன்படும். நேப்பியர் பாலத்திற்கும் முகத்துவாரத்திற்கும் இடையே ஆற்றின் ஆழம் 10 அடி இருக்கும் வகையில் மண் வாரப்படுகிறது. இரண்டு மண்வாரி யந்திரங்கள் இந்த வேலைக்குத் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

முகத்துவாரத்தில் இருந்து, சற்று மேற்கே வருவோம். திட்ட வேலைகள் நடந்து கொண்டிருக்கும் போதே அங்கு எழில் குலுங்கும் பூங்கா புன்னகை பூப்பதைக் காண்கிறோம். இந்தப் பூங்காவுக்கு அருகிலே நீச்சல் குளம், படகு கிளப் ஆகியவை கட்டப்படுகின்றன.

இவை மட்டுமா? சிறுவர்கள் சிரித்து மகிழச் சிலைகள் பலவும் வைக்கப்படும். பாம்பாட்டி, முதலை, கொக்கு, வலைவீசும் மீனவர், நாட்டியப் பெண், ஆகிய சிலைகள் இருக்கும்.

முகத்துவாரத்தில் ஆற்றை ஆழப்படுத்துதல்





ஆடு பாம்பே....!

இவையன்னியில் அடுக்கடுக்காக அமைந்த படிகளில் 'சலசல' வென்று ஓடி வரும் தண்ணீர், வண்ண விளக்குகளுக்கிடையே அழகு நடமாடும்! ஆங்காங்கே நிறுவப்பட்டுள்ள நீர்த்தொட்டிகளில் நீர் ஊற்றுகள் உண்டு. குளிர் தென்றல் வீசும் இரவு நேரத்தில் வண்ண விளக்குகள் ஜொலிக்க, அதற்கிடையில் நீர் ஊற்றுகள் குடை விரித்ததுபோல் நீரைச்சொரிய, கூவத்தின் கரை பூலோகமா அல்லது புராணத்தில் வரும் கைலாசமா எனத்திகழும் என்பதில் சந்தேகம் இல்லை.

இத்துடன் கூவம் கால்வாய்ப் பகுதியில் உல்லாசப் படகுகளும் பவனி வரும் வகையில் திட்டமிடப் பட்டுள்ளது.

எழில் குலுங்கும் பூங்கா, அழகுச் சிலைகள், நீச்சல் குளம், படகு கிளப், நீர் ஊற்றுகள், வண்ண விளக்குகள், உல்லாசப் படகுகள் ஆகியவை ஒரே இடத்தில் அதுவும் நகரின் இதயம்போன்ற இடத்தில் இருப்பது என்பது சென்னை மக்களுக்குத் தித்திக்கும் செய்தியாகும்.

திரைப்படம் எடுப்பவர்கள் வெளிப்புறக் காட்சிகளுக்காக இனி வெளியூர் செல்லத் தேவையில்லை. கூவத்தின் பூங்காவிலேயே திரைப் படம் எடுக்க, கவின்மிகு காட்சிகள் பல இருக்கும்.

போர் நினைவுச் சின்னத்திற்கு அருகில் ஆரம்பிக்கும் இந்தப் பூங்கா, பொது மருத்துவமனை வரை நீண்டு இருக்கும். கூவம் ஆற்றின் கரையோரப் பகுதிகளை அழகுபடுத்தும் இந்தப் பணிகளுக்காக மட்டுமே ரூ. 12 லட்சம் செலவு செய்யப்படும்.

பல்கலைக் கழகத்திற்கு அருகே உள்ள நேப்பியர் பாலத்தில் இருந்து நுங்கம்பாக்கம் ரயில் பாலம் வரை உல்லாசப் படகுகள் செல்லும் இந்த ஆறு நுங்கம்பாக்கம் அருகே 75 அடியாக இருக்கும். பின்னர் முகத்துவாரத்தில் 150 அடி அகலமாக அமையும். ரயில் பாலத்திற்கு அருகில் 5 அடி ஆழமாக இருக்கும் இக்கால்வாய் முகத்துவாரத்தில் சுமார் 10 அடி ஆழம் இருக்கும். கால்வாயை ஆழப்படுத்துவதில் நாள்தோறும் சுமார் 2,250 பேர் வேலை செய்கிறார்கள். இம்மக்கள் கோவை, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு முதலிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள்.

கால்வாயின் இருபக்கத்திலும் 10அடி அகலத்திற்கு இரண்டு காங்கிரீட் நடைபாதை உண்டு. நுங்கம் பாக்கம் ரயில் பாலத்தின் அருகில் இருந்து மனைவி மக்களுடன் கடற்கரை வரை உல்லாச நடைபோடலாம்.

மணக்கும் பூங்காக்கள், புல்வெளிகள்...





ஆறு லட்சம் சிமெண்டு பலகைகள் தயாராகின்றன.

கால் வலிக்கிறதா?

ஆற்றின் குறுக்கே உள்ள ஏதாவது ஒரு பாலத்தின் அருகில் அமைக்கப் பட்டிருக்கும் படி வழியே மேலே ஏறி, பேருந்தைப் பிடித்து, நினைக்கும் இடம் செல்லலாம். கூவம் ஆற்றை கால்வாய்ப்படுத்த மட்டும் செலவாகும் தொகை ரூ. 50 லட்சம்.

ஆற்றின் கரையோர அமைப்புக்குச் சிமெண்டு பலகை தயாரிக்கும் வேலை வெகு தீவிரமாக நடைபெற்று வருகிறது. மொத்தம் 6 லட்சம் சிமெண்டு பலகைகள் தேவை இதுவரை 3½ லட்சம் தயாரிக்கப் பட்டுள்ளன. சிமெண்டு பலகை தயாரிக்கும் வேலை நுங்கம்பாக்கத்தில் இரு இடங்களில் நடைபெறுகின்றது. நுங்கம்பாக்கம் ரயில்பாலத்தருகில் துவங்கி

ஆற்றோரம் கரை அமைப்போம் ஏலேலோ....!

சிமிண்ட் கரை
அமைக்கும் வேலே

சிமிண்ட் பலகைகளே ஆற்றின் கரையோரத்தில் அமைக்கும் வேலே தீவிரமாக நடந்து வருகிறது.

கூவம் அழகு பூணுவதைக் கண்டோம். இனி அதன் கரையோரத்தில் குடிசை வாழ் மக்கள் வசிக்கிருர்களே, அவர்கள் நிலே என்ன? ஆற்ருேரப் பகுதிகளில் வசிக்கும் குடிசைவாழ் மக்கள் புனர் வாழ்வுக்காக மட்டும் 16·50 லட்சம் ரூபாய் செலவு செய்யப்படும். சித்ரா டாக்கீஸ் எதிரிலுள்ள குடிசைகள் அனைத்தும் அப்புறப்படுத்தப்பட்டு அவர்களுக்கு சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலேப் பள்ளிக்கு எதிரிலும், கிண்டி பொறியியல் கல்லூரிக்கு பின்னுல் உள்ள இடத்திலும் தீப்பிடிக்காத வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும். சீரமைப்பு வேலேகளையொட்டிக் குடிபெயர வேண்டிய குடும்பங்களின் எண்ணிக்கை 941 ஆகும். 154 வீடுகள் இதுவரை கட்டிமுடிக்கப்பட்டு, குடும்பங்கள் குடி அமர்த்தப்பட்டுள்ளன.

கூவத்தை ஒட்டி ஆங்காங்கே வாழ்ந்து வந்த சலவையாளர்களுக்குப் பயன்படும் வகையில் நமசிவாயபுரத்தில் 15 ஆயிரம் ரூபாய் செலவில் ஒருசலவைத்துறை கட்டிக்கொடுக்கப்பட்டுவிட்டது.

அறிஞர் அண்ணா அவர்கள் துவக்கிய கூவம் சீரமைப்புத் திட்டம் தமிழ்நாட்டுக்குப் பொருத்த மான வகையில் முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களால் செயலாற்றப்படுகிறது.

நகரின் புகழைக் குறைத்து வந்த கூவம் இனி பொற்குடத்திற்குப் பொட்டு வைத்தது போலச் சென்னைக்கு அழகூட்டப் போகிறது.

கடற்கரைக்குச் செல்கிறவர்கள் இனி மனைவி மக்களுடன், கூவத்திற்கே செல்லலாம். நல்ல காற்றை, நறுமணத் தென்றலை, அழகின் சிரிப்பை இனி நகர மக்களுக்குக் கூவம் என்ற மங்கை நல்லாள் அள்ளி அள்ளித் தருவாள்!

கூவத்தின் புன்னகை!

கூவம் திட்டத்தைத் துவங்கி வைத்த முன்னாள் பொதுப்பணி அமைச்சரும்....



கூவம் திட்டத்தை நிறை வேற்றி வருகின்ற இந்நாள் பொதுப்பணி அமைச்சரும்.



தமிழ் நாடு அரசாங்க அச்சக